செய்தி வெளியீடு எண் : 999 நாள் : 19.07.2024

செய்தி வெளியீடு

**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களின் தலைமையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் செயல்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் இன்று (19.07.2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டு கனிமவளத்துறையின் வருவாயை பெறுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பட்டியலிட்டார். சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் வைத்துள்ள நிலுவை தொகையினை வசூல் செய்ய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். சுரங்கங்கள் மற்றும் குவாரிகளில் விதி மீறல்களை ஆய்வு செய்து அபராதம் விதிப்பது குறித்தும், அண்டை மாநிலங்களுக்கு விதிகளுக்கு புறம்பாக கனிம வளங்களை எடுத்து செல்லும் வாகனங்களை கைப்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளவும் வலியுறுத்தினார். மேலும் பதிவு செய்யப்படாமல் இயங்கும் செங்கல் சூளை, எம்.சாண்ட் மற்றும் கிரஷர் அலகுகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். பறக்கும் படைகள் மண்டலங்களில் திடீர் தணிக்கை மேற்கொண்டு கனிமங்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் (கூடுதல் பொறுப்பு) திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., கனிம வளத்துறை ஆணையர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., மற்றும் கனிம வளத்துறை இணை இயக்குநர்கள், துணை இயககுநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu